ராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் கெரில்லா போர்ப்பயிற்சி!

(கொழும்பு)

விசேட இராணுவப் பயிற்சி பெறுவதற்கென 90 இராணுவ அதிகாரிகள் விரைவில் இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா கூறியுள்ளார்.

இராணுவத் தளபதி இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,—

"இந்தியாவில் முன்னர் விசேட கொரில்லா இராணுவப் பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் தற்போது வடக்கு—கிழக்கு யுத்தமுனைகளில் கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

மேலும் 90பேரைக்கொண்ட

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 32 இதழ் 162
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-7-1994

தேர்தல் வன்முறைகளில் இதுவரை ஐவர் பலி!

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட தேர்தல் வன்முறைகளில் இதுவரை ஐவர் பலியாகியுள்ளனர்.

இவர்களில் இருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள், ஏனைய மூவரும் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களாவர்.

ஆதரவாளர்கள் மத்தியில்

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஐந்து வருடங்களின் பின்

அவசரகால சட்டம் நீங்கினாலும்

உடன் மாற்றங்கள் ஏற்படாது!

வடக்கில் தொடர்ந்தும் பொருளாதாரத் தடை!!

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் ஐந்து வருடங்களின்பின் நேற்று நள்ளிரவு முதல் காலாவதியானாலும் அதனால் நாட்டில் உடனடியாக எதுவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. குறிப்பாக வடக்கில் அமுலிலுள்ள பொருளாதாரத் தடையை அரசு தொடர்ந்தும் அமுல்படுத்திவரும் என அரச தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம் நேற்று நள்ளிரவுடன் காலாவதியானது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கு அரசாங்கம் நாடாளுமன்றத்தை திரும்பவும் கூட்டவேண்டும். அதனாலேயே ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை காலாவதியாக அனுமதியளித்துள்ளார் என எதிரணியினர் தெரிவித்துள்ளார்?

அவசரகாலச்சட்டத்தின் கீழ் அரசு 672 பேரை தடுத்துவைத்துள்ளது எனினும் இவர்களது தடுத்துவைப்பு காலம் முடிவடைந்ததும் [illegible]

(4ம் பக்கம் பார்க்க)

படை நடவடிக்கை பாதிக்கப்படாது

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் காலாவதியானபோதிலும் வடபகுதி மீது எடுக்கப்படும் எந்த ஒரு இராணுவ நடவடிக்கையும் பாதிக்கப்படாதென வெளிநாட்டு ராஜதந்திரிகள் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(2-ம் பக்கம் பார்க்க)

ரணில் எதிர்ப்பு

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை நேற்றுடன் காலாவதியாக அரசு எடுத்த முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையாக எதிர்த்ததாக தெரிவிக்கப்பட்டது.

எப்படியும் மீண்டும் நாடாளுமன்றத்தை கூட்டி அவசரகால சட்டத்தை நீடிக்கவேண்டும். இல்லையேல் சட்டரீதியாகவும், நடைமுறையிலும் பல இக்கட்டான சூழ்நிலையை அரசு எதிர்கொள்ளவேண்டிவரும் என பிரதமர் வாதாடியதாக கூறப்படுகிறது. —3க-இ

தேர்தலில் வெற்றிபெற்றதும் புலிகளோடு உடன் பேச்சு

(கொழும்பு)

"எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றிபெற்றதும் உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவோம்" என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர் பேராசிரியர் எஸ் எல் பீரிஸ் நேற்று முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை கொழும்பில் வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்.

பேராசிரியர் பீரிஸ்

பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றிபெற்றும், ஜனாதிபதி ஆட்சிமுறையை

4-ம் பக்கம் பார்க்க)

மற்றொரு ஐ.தே.க. உறுப்பினர் இராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் [illegible] சனத் குணதிலக 'இராஜினாமா செய்துள்ளார்.

இவர் பிரபல சினிமாத்திரைப் பட நடிகரும், ஐ. தே. கவின் மாகாணசபை உறுப்பினருமாவார்.

[illegible]களுக்கு எதிரான கிளர்ச்சி நாட்களுக்கு முன் [illegible] படை விடுத்த நடவடிக்கையை விசாரிக்க அரசு எந்த ஒரு விசாரணைக் குழுவையும் இதுவரை நியமிக்கவில்லை,

(3ம் பக்கம் பார்க்க)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமைபோன்று நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (க)

அமைதியான சூழ்நிலையில் தேர்தல் நடத்த வேண்டும்

- சந்திரிகா

(கொழும்பு)

அமைதியான ஒரு சூழ்நிலையிலேயே தேர்தல் ஒன்று நடாத்தப்பட வேண்டும். இந்த அமைதியான சூழ்நிலையைத் ஏற்படுத்துவதற்கு எவர் முயற்சி எடுத்தாலும் நானும் பொதுசன ஐக்கிய முன்னணியும் அதை [illegible] கண்டிக்கிறோம்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்க ஏஜென்ஸி செய்திகளுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளில்

(4ம் பக்கம் பார்க்க)

ஈ.பி.டி.பி-ராணுவம் முறுகல் நிலையில்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் ஈ பி டி பி. யினருக்கும், இராணுவத்தினருக்குமிடையில் நாளுக்கு நாள் முறுகல் நிலை அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தீவகப் பகுதிகளிலுள்ள பொதுமக்கள் தமக்கு வேண்டியவற்றைத் தம்மிடமே கேட்கவேண்டும் எனவும் எந்த விதமான உதவியையும்

(4ம் பக்கம் பார்க்க)

'ராக்கிங்' புரியும் மாணவர் மீது

காவல்துறை நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

ராக்கிங் புரிபவர்கள் மீது தமிழீழ காவல்துறையினர் நேற்றுத் தொடக்கம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளனர்.

நடேசன் அறிக்கை

தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது தேசம் மாணவ சமு

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

டில்கா வாச் அன்
ரேடியோ வேக்ஸ்

சகலவிதமான மணிக்கூடுகள், ரேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி. ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி: தலைமையகம்: 284 ஆஸ்பத்திரி வீதி. (வானவில் - கல்யாணி அருகில்) யாழ்ப்பாணம்.
(ஏ-4183)

O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கு குறைந்த காலங்களில் Distinction பெற பேறுபேறுகள் தரப்பெற்ற 27 வருட அனுபவமுடைய ஆசிரியரின் 40 மணித்தியாலங்களில் விஷேட பிரத்தியேக வகுப்புக்கள். ஆறுமுகநாதன்" 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, [illegible] வீதி, சுண்டுக்குளி. (சி-1188

வைத்தியம்

செங்கமாரி, (Hepatitis) இரப்பைஅல்சர், ஆஸ்மா முடக்குவாத நோய்களுக்கும் வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை சுற்றல், சரும நோய்கள், மாதவிடாய்க்குழப்பம், இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, வயிற்றுப்புண், மகப்பேறின்மை, விந்துக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். [illegible] வைத்திய கலாநிதி இ. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். சி-1085

காலமானார்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பொதுச்செயலாளர் திரு. சு. [illegible] நேற்றுமுன்தினம் காலமானார்.

பிரபல சமூக, சமயத் தொண்டரான இவர் [illegible] கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் முன்னாள் அதிபருமாவார்.

சிறுமி மரணம்

(நெல்லியடி)

கிணற்றுக்கு அருகில் நின்று விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயதுப் பெண் சிறுமி ஒருத்தி திடீரென ஏற்பட்ட [illegible], அக் கிணற்றில் தூக்கி எறியப்பட்டு, பரிதாபமாக மரணமானார்.

இச்சம்பவம் துன்னாலை மத்தியில் நிகழ்ந்துள்ளது. கமலநாதன் சபிதா வயது 2 என்னும் பெண் சிறுமியே இவ்வாறு மரணமாகியவராவர்.
(160-இ)

வருடாந்த திருவிழா

(அச்சுவேலி)

எழிலூர் புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த விழா நாளை 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 6-30 மணிக்குக் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னை வேளாங்கண்ணி திருச்சொரூப பவனியும், பாசையூர் பங்குத் தந்தை அருட்திரு இ. போ. ஜெயக்குமார் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.
-59

இன்று

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் மணிவிழா நிகழ்ச்சித் தொடக்க நாடகமும் அரங்கியலும் கல்வியியற் கருத்தரங்கு திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியில் இன்று 16ம் திகதி காலை 8-30 தொடக்கம் நடைபெறவுள்ளது. நாடகம், அரங்கு பற்றி பல்வேறு கோணங்களில் கருத்துரைகள் வழங்கப்பட இருக்கின்றன. (ம)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை காக்கைதீவு மாவளை வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் தற்போது நடைபெறுகின்றது. விசேஷ நிகழ்ச்சியாக யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாசாலை அதிபர் க. சண்முகநாதனை கௌரவிக்கும் நிகழ்ச்சி இன்று மாலை ஆறு மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு புத்தொளி சிவபாதம் தலைமைதாங்குவதுடன் சண்டிலிப்பாய் மேலதிக அரசாங்க அதிபர் த. வைத்தியலிங்கம் சண்முகநாதனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பார்.
(எஸ்)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான ஓர் முக்கிய கலந்துரையாடல் இன்று சனி கிழமை காலை 10 00 மணிக்கு யாழ். பஸ் நிலைய காரியாலயத்தில் நடைபெறும்

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ்ச் சோதிடர் ஒன்றியத்தின் மாதாந்த இலவச சோதிட வகுப்பும் ஆய்வரங்கும் இம்முறை, இன்று சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய ஆய்வரங்கில் ஐயா. சச்சிதானந்தம் "சோதிடம் கூறும் விஞ்ஞான உண்மை" என்ற பொருளில் ஆய்வுரை வழங்குவதுடன் ஐ. வைத்தியநாதன் தலைமையில் "சோதிட அரங்கம்" இடம்பெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 52வது ஆண்டு நிறைவு விழா இன்று 16ம் திகதி சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் பி. ப 2 00 மணிக்கு நிலையத் தலைவர் திரு. ம. சுந்தரலிங்கம் தலைமையில் நிலைய முன்றலில் நடைபெறும்.

0 0

(அச்சுவேலி)

யாழ். குருநகர் புனித கார்மேல் அன்னை திருவிழாவை யொட்டி இன்று 16ந் திகதி சனிக்கிழமை இரவு 7-00 மணிக்கு குருநகர் கார்மேல் மாதா இளைஞர் மன்றத்தினரால் கார்மேல் அன்னை விளையாட்டு மைதானத்தில் "தர்ம பிரகாசம்" என்ற நாடகக்கூத்து இடம்பெறவுள்ளது.
59

0 0 0

(கொழும்புத்துறை)

முதறிஞர் புலவர் அமரர் திரு. வ. சி. [illegible] அவர்களின் திருஉருவப்பட திரைநீக்கமும், நினைவுப் பேருரையும் இன்று 16ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். பொதுசன நூலக நல்லூர் கிளையில் இடம்பெறும். (154)

0 0 0

(பண்டத்தரிப்பு)

சதுமலை அம்பாள் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழா இன்று 16ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நிலையத் தலைவர் திரு. க. கலைநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் கிளிநொச்சி பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. குணபாலன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. த. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (72)

காபந்து அரசில் இவ்வளவு அமைச்சர்கள் தேவைதானா?

-தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

காபந்து அரசில் அமைச்சரவையில் குறைந்த அளவு அமைச்சர்களே இருக்கவேண்டும்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிய அமைச்சரவை ஒன்றை வைத்திருப்பது அரசியலமைப்புக்கு புறம்பான ஒன்றல்ல. என்றாலும் அரசியலமைப்பின் அடிப்படை கருத்துக்கு இது ஒவ்வாதது என தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். -இ

இராணுவ செலவை குறைக்க கோரிக்கை

(வாஷிங்டன்)

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் தங்கள் இராணுவச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று உலக வங்கி கேட்டுள்ளது.

1988ம் ஆண்டு தொடக்கம் 1993ம் ஆண்டுவரை தலா 50 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் பாதுகாப்புக்கு செலவிடப்பட்டுள்ளதென்றும், இந்தத் தொகையைக் குறைத்து நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்துமாறு உலக வங்கி மேலும் கேட்டுள்ளது. ம-இ

பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பட்டதாரி மாணவர்கள் இரண்டரை மாதங்கள் பயிற்சி பெறுவதற்காக யாழ். மாநகர சித்த மருத்துவப் பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு ஆயுர்வேதத் திணைக்கள ஆணையாளர் இவ்வுத்தரவை வழங்கியுள்ளார். சுழற்சி முறையில் இரண்டரை மாதங்கள் பயிற்சி பெறும் இம்மாணவர்கள் தொடர்ந்து 1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம்வரை பகுதி பகுதியாகப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்கள்.
-162

பொன் விழா ஒன்றுகூடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் பொன் விழா ஒன்றுகூடல் கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவிகள் சங்க உப தலைவி வைத்தியகலாநிதி திருமதி புனிதம் தம்பிராசா தலைமையில் நடைபெற்றது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி. சிவலோகநாயகி இராசநாதன் பிரதம விருந்தினராகவும், கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திருமதி எஸ். சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.
52

படை நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அரச சில இழப்புக்களை இதனை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் தற்போதைக்கு வழக்கம்போல் செயல்படும்படி அரச திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடபகுதி மீது விதிக்கப்பட்ட சில தடைகளை எதிர்த்து நீதிமன்றில் சவால் விடப்படலாம். இப்படியான சூழ்நிலை ஏற்பட்டு அரசு தோல்வியுறும் பட்சத்தில் மீண்டும் அவசரகால நிலைமை [illegible] அது நீடிக்கும் என பி. பி. ஸி. யின் கொழும்பு முகவர் தெரிவித்தார். கே-இ

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப 2 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

மற்றொரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனை எதிர்க்கும் விதமாகவே திரு. குணதிலக ஐ. தே. கவிலிருந்து இராஜினாமாச் செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் திரு. குணதிலக எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாகவும் முடிவுசெய்துள்ளார். -இ

யாழ். றோட்டறிக் கழகம்
வறியோருக்கான
இலவச கண் சத்திர
சிகிச்சை முகாம் — 3

நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கான
ஆரம்ப பரிசோதனை
நாளை 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகும்.
இடம்: இணுவில் மக்லியொட் வைத்தியசாலை
"கற்றக்" நோயாளர்கள்
17-7-94 காலை 7-30 மணிக்கு
இணுவில் மக்லியொட் வைத்தியசாலைக்கு
சமுகமளிக்கவும்;

Rtn. E. சரவணபவன்,
தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
(ஏ-4218)

பணிநிலை வெற்றிடங்கள்

கீழ்க்காணப்படும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காசாளர்
   தனியார், அரச நிறுவனங்களில் காசாளராக பணிபுரிந்த அனுபவம்
2. உள்ளகக்கணக்காய்வாளர்
   (அ) க. பொ. த உயர்தர பரீட்சையில் அல்லது அதற்கு சமமான கல்வித் தராதரம்
   (ஆ) தனியார், அரச நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளராக பணிபுரிந்த அனுபவம்
3. பாதுகாப்பு ஊழியர்கள்
4. முச்சக்கர மிதிவண்டி ஓட்டுநர்
5. நோயாளர் பராமரிப்பாளர்
6. உணவு பரிமாறுபவர்
7. தேநீர் தயாரிப்பாளர்.

மேற்படி விண்ணப்பங்கள் ஆண்களிடமிருந்து மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
நோயாளர் நலன்புரி சங்கதலைமைச் செயலகம்
512, கேர்ணல் கிட்டு சாலை
யாழ்ப்பாணம்.

22-7-94ற்கு முன்னர் நேரிலோ, தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

நிர்வாகக் குழு
நோயாளர் நலன்புரிசங்கம்
(ஏ-4217)

மணிவாக்கு

தூய்மையற்ற பாத்திரத்தில் பாலை ஊற்றி வைக்க முடியாது. அது போன்ற களங்கமுள்ள உள்ளத்தில் ஆன்மீக அறிவொளியை ஏற்றுவதில்லை.

- குருநானக்

நமது நோக்கு

தேர்தல் வன்முறை!

தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவோர் பிடிவிறாந்து இல்லாது கைதாவர் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

வேட்பு மனுக்கள் தாக்கலாகிய இறுதி நாள் முதல் பல இடங்களில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

வழமைபோல - ஆளும் கட்சியினரே வன்முறையைத் தூண்டியிருக்கின்றனர். பொலிசார் பாராமுகமாக நடந்திருக்கின்றனர். இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் சிவில் உடையில் வருகிறார்கள் என்றெல்லாம் பரவலாக பேசப்பட்டபோது அரசு மௌனம் சாதித்தது;

அதுமட்டுமல்ல, பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு உற்சாகமளித்த சம்பவங்களை மக்கள் மறக்கமாட்டார்கள்.

எனவே - பிடிவிறாந்தில்லாது கைது என்ற உத்தரவால் எதிர்க்கட்சியினர் மேலும் பாதிக்கப்படலாம்.

இம்முறை - ஆளும் கட்சி ஆதரவாளர்களே, 'கொடுக்கும்' நிலையிலிருந்து மாறி 'வாங்கும்' நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்;

கடந்த பதினேழு ஆண்டுக்கால ஆட்சியின்போது அரச வன்முறைகளைக் கண்டு, கட்டுண்டு பொறுத்திருந்து, சலித்து விட்ட நிலையில், மக்கள் கொதித்தெழுந்து கொள்வது புதுமையானதல்ல.

ஆளும் கட்சி ஆதரவாளர்களே பாதிக்கப்பட்ட பின்புதான் ஜனாதிபதி சுறுசுறுப்படைந்திருக்கிறார்; அவசரப் பணிப்புரைகளைப் பொலிஸ் மா அதிபருக்கு விடுத்திருக்கிறார். வன்முறை நாடாக உலகிற்குத் தெரியவந்தால் பொருளாதாரம் பாதிக்கும் எனவும் அறிக்கை விடுத்திருக்கிறார்.

தேர்தலை சுதந்திரமாகவும், கண்ணியமாகவும், அமைதியாகவும் நடாத்த உதவும்படி பிரதமர் சகல அரசியல் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்;

இத்தகைய வேண்டுகோள்களை எதிர்க்கட்சியினர் முன்பு விடுத்த போது "ஆகட்டும், பார்க்கலாம்!" என்ற தோரணையில் தட்டிக் கழித்ததை மக்கள் மறந்துவிடவில்லை.

தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வன்முறை விதைத்தவன்...? விடை இன்றைய நாட்டு நிலைமை!

படையினரின் 6 மாதகால தாக்குதலில்
வடக்கில் 75 தமிழர் பலி

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டின் கடந்த 6 மாதங்களில் படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகங்கள், எறிகணை மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 75 தமிழர்கள் வடபகுதியில் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுதவிர காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற வேளைகளிலும் பலர் பலியாகியுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 31 பேர் கடற்படையினரால் கடலில் வைத்து சுடுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 மாதங்களில் கொல்லப்பட்ட 75 பேரில் 54 பேர் யாழ். மாவட்டத்திலும் 21 பேர் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களில் கொல்லப்பட்டனர்.

படையினரின் தாக்குதல்கள் தொடர்ந்தும் வடபகுதியில் இரவு-பகலாக இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஈ-நி)

1750 அடையாள அட்டைகள்
யாழ். வந்தன

(மானிப்பாய்)

ருகுணு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 1750 தேசிய அடையாள அட்டைகள் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இவற்றில் 72ம், 73ம் ஆண்டுகளில் பெற்று தொலைந்த அடையாள அட்டைகளும் புதுப்பிக்க விண்ணப்பித்தவர்களின் 700 அட்டைகளும், முதற் தடவையாக பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களது 600 அடையாள அட்டைகளும் 250 தொலைந்த அடையாள அட்டைகளும் பதிலாக விண்ணப்பித்தவர்களினதும் அடங்கியிருக்கின்றன. 71-சி

சந்நிதி கோவில்
ஹெலி தாக்குதலில் சேதம்

(யாழ்ப்பாணம்)

ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 50 கலிபர் தாக்குதலினால் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 7-55 மணியளவில் மேற்படி கோவிலில் பெருமளவு பக்தர்கள் கூடியிருந்தபோது; அப்பகுதிக்கு திடீரென வந்த ஹெலி ஒன்று 15 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக, 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டபோது, பக்தர்கள் அச்சத்தினால் நாலாபக்கமும் சிதறியோடி பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டதினால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

இதேநேரம் மேற்படி கோவிலுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -வீ-சி

ஐ.தே.க. தோற்றால்
வன்முறை வெடிக்குமா?

(கொழும்பு)

ஐ. தே. கட்சி இம்முறை தோற்றால், வன்முறை வெடிக்கும் என பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் ஓர் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தாங்கள் பாதிக்கப்பட்டதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் தேர்தலின் பின் வன்முறையில் இறங்க பலர் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஐ. தே. க.வினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரமன்றி அவர்களின் மனைவி, பிள்ளைகள், உறவினர் நண்பர்களையும் வீணாக குற்றஞ்சாட்டி வருகிறார்கள் என அண்மையில் ஐ. தே. க.விலிருந்து விலகி எதிரணி சந்திரிக்காவுடன் இணைந்த திரு காமினி பொன்சேகா குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும் தென்மாகாணசபை தேர்தலின் போது பல முறைகேடுகள் இடம்பெற்றதை ஒப்புக் கொண்ட பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா இம்முறை நீதியும் நியாயமுமான தேர்தலை உறுதிப்படுத்த தாம் திடம் கொண்டு இருப்பதாக குறிப்பிட்டார். கே-சி

தேர்தலைகுழப்பசில
தீய சக்திகள் முயற்சியாம்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களைக் குழப்புவதற்கு சில தீய சக்திகள் முயலலாம் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளையில் தேர்தலில் சில முறைகேடான செயல்கள் நடக்கலாம். பொலிஸார் கூட அதில் ஈடுபடலாம் என பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வாவும் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குப்பின் நிகழும் வன்முறைதான் கவலை தருகிறது. பழிவாங்கும் உணர்வு பலருக்கு உண்டு. ஆனாலும் வன்முறை ஏற்படுத்த விஷமிகள் முயல்வார்கள். அதனைத் தவிர்க்கவே நாங்கள் முயல்கிறோம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்றின் பிரதம ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணத்தில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்குகளை அளிக்க முடியாது.

ஆனால் மற்ற இடங்களில் நியாயமாக நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக திரு. ஜெயசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

“இயற்கையை பாதுகாப்போம்
இயன்றளவு உறுதியெடுப்போம்”

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 07-16 - சனி இரவு
08-01 அறிமுக வசனம்
08-10 நிகழ்வும் பகிர்வும்
08-25 நேயர் மடல்கள்
08-30 செய்திகள்
08-40 லெப்டினன்ட் கேணல் நீலன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி;

1994 07-17 ஞாயிறு காலை
07-02 மாவீர வணக்கம்
07-15 வைத்திய [illegible]
07-30 செய்தி
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 வைத்திய [illegible] நிகழ்ச்சித் தொடர்.

இராசி பலன்

16 07 - 1994
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆனி 32)

அஷ்டமி பி. ப. 4-47 வரை; சித்திரை மாலை 6-35 வரை. மரணயோகம், இராகுகாலம் காலை 9-30 முதல் 10-30 வரை. சுபநேரம் மாலை 4-00 முதல் 4-30 வரை.

மேடம்: விவகாரம் வேகம், தொழில் சிறப்பு, மனச்சந்தோஷம்.

இடபம்: முயற்சி பலிதம், எதிர்பாராத பண உதவி, பாராட்டு.

மிதுனம்: வேலைப்பழு அதிகரிக்கும் தினம், அலைச்சல்.

கடகம்: எதிரிகளின் தொல்லை, மனவிரக்தி, தொழில் போட்டி.

சிம்மம்: உறவினர் மகிழ்ச்சி, சுகசௌக்கியம், நண்பர் சகவாசம்.

கன்னி: கடுமையான தினம், வருமான பாதிப்பு, குடும்ப பகை.

துலாம்: காரியசித்தி, பணப்புழக்கம், வரவுகள்.

விருச்சிகம்: மனக்குறை, மனப்போராட்டம், கவலை தரும்.

தனுசு: பணியாளர் பாராட்டு, தொழில் லாபம், விநோத கற்பனை.

மகரம்: உடல் ஆரோக்கியம், தெய்வீகப்பணி, பயணம்.

கும்பம்: அபிப்பிராயபேதம், [illegible], தாழ்ந்தநிலை.

மீனம்: கெட்ட சகவாசம் குடும்பசிக்கல், தொழில் பாதிப்பு.

ஜோதிடர்

ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று 16ம் திகதி யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலும், 17ம் திகதி யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயத்திலும் மேடையேற இருந்த கேதீஸ்வரனின் ஆடல் அணியினரின் 'முருகும் முருக' ஆடற்கலை எதிர்வரும் 30ம், 31ம் திகதிகளில் அதே மண்டபங்களிலேயே மேடைபெறவுள்ளது.

ஏப்ரல் மாத கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட றெயில்வே கடமைப் பாதுகாவலர்களின் ஏப்ரல் மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் வழங்கப்பட்டது.

இதில் 860 கடமைப் பாதுகாவலர்கள் தமது ஏப்ரல் மாதத்திற்குரிய சம்பளத்தை காசோலைகள் மூலம் பெற்றுக்கொண்டார்கள்.

162-71

பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய தேசிய சான்றிதழ் (என் சி ஈ) பரீட்சையின் 11ம் பகுதி 1994, யூலை மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

11ம் பகுதிக்கு விண்ணப்பித்து, கொழும்பில் இப்பரீட்சைக்குத் தோற்றுநர்கள் யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். இதுவரை யாழ்ப்பாணம் (வலயம் 1) கல்வித் திணைக்களத்தில் தமது பெயரைப் பதியாத பரீட்சார்த்திகள் தமது பெயர்களைப் பதியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

-154

பலதும் பத்தும்

பயங்கரவாதியா?

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடுபவர்களைப் பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டி, ஒதுக்கப்பட வேண்டியவர்கள் எனப் பிரசாரம் செய்வதில் ஏகாதிபத்தியவாதிகள் கைதேர்ந்தவர்கள்!

சேகுவேரா - ஓர் பயங்கரவாதி எனத்தான் அறிமுகமானவன்; அவன் ஓர் மருத்துவப்பட்டம் பெற்றவன் என்பதையும், இரக்க உணர்வினால் நோயாளிகளிடம் பணம் பெறவில்லை என்பதையும் எத்தனை பேருக்குத் தெரியும்?

உலக வரலாறு, தொல்பொருள் ஆய்வு ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடுடையவன். ஆஸ்துமா வியாதியால் நலிந்தபோதும் ஒரு கையில் Inhaler - மருந்துக்கருவி - மறுகையில் அரசியல் புத்தகத்தோடுமேதான் காணப்படுவானாம்!

—மயூரன்

பாடசாலை
திருத்த வேலைகளுக்கு 10,000 ரூபா அன்பளிப்பு

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் லயன்ஸ் கழகம் சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயத்தின் கட்டிட திருத்த வேலைகளுக்காக பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். எஸ். தர்மராஜா மேற்கொண்ட முயற்சியினால் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இந்த பணம் கடந்த 1886ம் ஆண்டில் நிறுவப்பட்ட மேற்படி பாடசாலையின் பழுதடைந்த கட்டிடத்தை புனரமைப்புச் செய்வதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

அண்மையில் சுதுமலையில் நடைபெற்ற மானிப்பாய் லயன்ஸ் மாதாந்த கூட்டத்தில் வைத்து இப்பணம் பாடசாலை அதிபர் திருமதி எஸ். ஜெகவீரசிங்கத்திடம் சம்பிரதாய முறைப்படி கையளிக்கப்பட்டது. -72

தேர்தல் பிரசார உரை:

வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் தாயகமே தேவை!

- தமிழீழ விடுதலை இயக்கம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் ஒன்றிணைந்த தமிழ் தாயகமே தமிழினத்தின் ஜீவாதாரக் கோரிக்கை. இதையே நாம் எமது கட்சியின் கொள்கையாக முன்வைத்து எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்குகளை கேட்கின்றோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் திரு. எம். கே. சிவாஜிலிங்கம் நேற்று வானொலியில் தேர்தல் பிரசார உரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

யுத்தத்தினால் விடுதலைப் புலிகளை ஒருபோதும் வெல்ல முடியாது. ஆகவே யுத்த நிறுத்தத்தை உடன் அமுல் படுத்தி அரசியல் தீர்வு காணப் [illegible], நாடு விரைவில் [illegible] என்று நாம் துணிந்து [illegible] கூறினோம்.

ஐக்கிய இலங்கை அமைப்பின் சமஷ்டி திட்டத்தின் கீழ், இனப் பிரச்சினைக்கு தீர்வு காணத் தயார் என விடுதலைப்புலிகள் தெரிவித்த யோசனையை நாம் ஆதரிக்கின்றோம் என்றும் அவர் கூறினார். (வி-இ)

● பேராதனை

வெளிவாரி பரீட்சைகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற் தேர்வுப் பரீட்சையும், விஞ்ஞான முதற் தேர்வுப் பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலை முதற் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதத்திலும், விஞ்ஞான முதற்தேர்வுப் பரீட்சை அக்டோபர் மாதத்திலும் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவு அறிவித்துள்ளது.

முன்னர் இப்பரீட்சை ஆகஸ்ட் மாத முற்பகுதியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. —162-இ

ஈ. பி, டி. பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈ. பி. டி. பி யிடம் கேட்கக் கூடாது என்றும் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு கட்டளையிட்டுள்ளனர்.

இத்துடன் மேற்படி பகுதிகளில் தற்போது இருக்கும் ஈ. பி. டி. பி. யினருக்கு வழங்கப்படும் சலுகைகளை இராணுவத்தினர் கட்டுப்படுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி

பல்கலைக்கழக மாணவர்க்கு

10 கோடி ரூபா செலவில் விடுதி வசதி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி வசதி அமைத்துக் கொடுக்க பத்துக் கோடி ரூபாவை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தப் பணம் வழங்கப்படுகிறது. இந்தப் பணத்தைக் கொண்டு விடுதி வசதிக்கான நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் 35 சத வீத மாணவர்களுக்கே விடுதி வசதிகள் உண்டு.

தற்போது கொடுபடும் கடனுக்கு 15 சதவீத வட்டி அறவிடப்படும். 40 தவணைகளில் இது திருப்பி செலுத்தப்படும்.

அண்மையில் பேராதனை, ருகுணு, கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் விடுதி வசதிகோரி பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கே-இ

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலாலி, மயிலிட்டி, வளலாய், இடைக்காடு, குப்பிளான் ஆகிய இடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இரு சாராருக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதால் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

மரண அறிவித்தல்

திரு. சு. சிவவாகீசர் B.A.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பொதுச்செயலாளரும் [illegible]/திருஞானசம்பந்த [illegible] திலைய முன்னாள் அதிபரும் சிறந்த சமூகத் தொண்டருமாகிய சுப்பிரமணியம் சிவவாகீசர் 14-07-94ல் காலமானார். அன்னார் தெல்லிப்பளை திரு. வ. சுப்பிரமணியம் (செல்லையா மாஸ்டர்) திலகவதி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் தொல்புரம் உமாதேவியின் அன்புக் கணவரும் [illegible], சிவயோகன், தயாநிதி ஆகியோரது அன்புத் தந்தையும், திருமதி மங்கைகள் இராமநாதன், திருமதி நீலாம்பிகை சண்முகலிங்கம் காலஞ்சென்ற விமலநாதன் திருநாவுக்கரசு ஆகியோரின் அருமைச் சகோதரரும் சந்திராதேவி சண்முகலிங்கத்தின் மைத்துனரும் [illegible], [illegible], சுதர்சினி, சொரூபினி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையுமாவார். இன்று 16-07-94 சனிக்கிழமை தொல்புரம் மேற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியை நடைபெற்று அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 3-00 மணிக்கு முளாய் மயானத்தில் தகனம்செய்யப்படும் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

1. மனைவி உமாதேவி சிவவாகீசர்
2. சகோதரி மங்கைகள் இராமநாதன்
3. துர்க்காதேவி தேவஸ்தானம்
   தெல்லிப்பளை

தொல்புரம் மேற்கு.
16 07 94

(இ-1127)

5ம் ஆண்டு பு/ம பரீட்சை:

அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் கிடைக்கும்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த வாரம் தபால்மூலம் அனுப்பப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சையில் தோற்றவுள்ளனர். -கே-இ

க. பொ. த (உ/த) பரீட்சை:

அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கான பாடசாலை மாணவர்களதும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளதும் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் தொடக்கம் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகளை பெறமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 48 ஆயிரம் பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றுவார்கள்.

வடக்கு—கிழக்கு உட்பட நாடெங்கும் 1030 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

பூசா தடுப்பு முகாம், மகசின் சிறைச்சாலை, ரத்மலானையிலுள்ள அந்தகர் பாடசாலையிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

பொதுத்தேர்தல் நடைபெறும் காரணமாக இவ்வருடம் க. பொ. த. (உயர்தர பரீட்சை) இரண்டு கட்டங்களாக நடத்தப்படும். முதலாவது கட்டம் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியும் இரண்டாம் கட்டம் 22ம் திகதியும் ஆரம்பமாகும். (கே-இ)

வீடு பார்க்க சென்றவர் இராணுவம் சுட்டு பலி

தெல்லிப்பளையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பகுதியில் தமது வீட்டைப் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. இ[illegible] [illegible] [illegible] (55-வயது) என்பவரே பலியானவராவார். (வி-இ)

அமைதியான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுவதற்கு எவருக்கும் உரிமையுண்டு.

பொதுசன ஐக்கிய முன்னணி [illegible] தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவர்கள் உடனடியாக விலகிவிட வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு வெற்றி நிச்சயம்.

தேர்தலில் வெற்றி பெற்றதும் ஐ. தே. க ஆதரவாளர்கள் தாக்கப்படலாம் என பரவலாக பேசப்படுகிறது.

இதனைப் பொய்யாக்கும் விதத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் வன்முறைகளில் ஈடுபடாது நடந்து கொள்ளவேண்டும் என்று திருமதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்தார். இ

ஐந்து வருடங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடைச்சட்டத்தின் கீழ் அவர்களை மேலும் ஆறு மாதங்களுக்கு தடுத்துவைக்க அரசாங்கத்தால் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு முதல் இராணுவ காவலரண்களில் சோதனை புரியும் உரிமையும் அவசரகால சட்டம் காலாவதியானதால் இல்லாது போய்விட்டது. ஆனால் பொலிசாரின் அழைப்பின்பேரில் இராணுவ [illegible] இராணுவம் [illegible] ஈடுபடமுடியும்.

இதேவேளையில் வடபகுதியில் அமுலில் உள்ள பொருளாதாரத் தடைகளை அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னர் தொடர்ந்தும் அரசு அமுல் படுத்தினால் அரசுக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் உரிமை எவருக்கும் உண்டு

எனினும் இவையெல்லாம் பொருட்படுத்தாது அரசு வழமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. -இ

ருக்கிங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயகத்திடமிருந்து பல வரலாற்றுக் கடமைகளை எதிர்பார்க்கின்றது. ஆனால் எமது கல்வியில் ஒரு அங்கமான பல்கலைக் கழகக் கல்விக்காக எமது மாணவர் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் பல்கலைக்கழகம் புதிதாகச் செல்லும்போது "ரக்கிங்" என்னும் பெயரில் பல வேதனைமிக்க சம்பவங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பலர் இவ "ரக்கிங்", என்னும் செயலுக்கு [illegible] செய்வதறியாது உள்ளனர். இருந்தும் இதனால் பாதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் பலர் எம்மிடம் வந்து முறையிடத் தொடங்கியுள்ளனர்.

ஓர் உன்னதமான சமுதாய அமைப்பை கட்டியெழுப்புவதற்காக போராடும் [illegible] நாம், இவ்வாறான அநாகரிகமான [illegible] தனங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆகவே இவ்வாறான ரக்கிங் என்னும் அநாகரீக செயலில் ஈடுபடுவோர் உடனடியாக இதனை நிறுத்தி எமது தேசத்தின் கல்வி, பண்பாடு என்பனவற்றை வளர்ப்பதில் [illegible] முன்வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எமது வேண்டுகோளை மீறி எமது தேசத்தின் பெற்றோர்களும், மாணவர்களும் துன்பப்படும் முறையில் ரக்கிங் புரிபவர்கள்மீது தமிழீழக் காவல்துறையினர் நேரடித் தொடர்ச்சி நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் இந்தியாவில் விசேட இராணுவப்பயிற்சி பெற செல்லவிருக்கின்றது என்றும் கூறினார். —வி-இ

தேர்தலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக ரத்துச்செய்துவிடும்.

அத்துடன் நாட்டின் உள்ள சமூகப்பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் போராளிக் குழுக்களுடனும் பேச்சுகள் நடாத்தி அரசியல் தீர்வு காணப்படும். என்று மக்கள் முன்னணித்தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்படுகின்றது. வி-இ

தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் ஏற்படும் போது பொலிசார் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்துவரும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களை அடுத்து ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி தமது பணிப்புரையில் தெரிவித்துள்ளார். (இ)

கண்டியில்

ஐ. தே. க. கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று கண்டியில் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையில் இந்த முதலாவது பிரசாரக் கூட்டம் நடைபெறவுள்ளது. அமைச்சர்கள் பலர் இதில் இன்று கலந்து கொள்ளவிருக்கின்றனர். -இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number [illegible]